எனது இல. PUB.ADM/SEC/13

அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,
தந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
2017 ஒக்ரோபர் மாதம் 04 ஆந் திகதி

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

## தேசிய உணவு உற்பத்தி புரட்சி

இலங்கை விவசாயத்துறையில் தன்னிறைவு பெற்று விளங்குகின்ற ஒரு நாடு என்பதில் எவ்வித ஐயமுமில்லை. எனினும் வறட்சி, பஞ்சம், வெள்ளம் ஆகிய இயற்கை அனர்த்தங்கள், உள்ளக மோதல்கள், வெளிநாட்டு ஆக்கிரமிப்புக்கள் ஆகியன நிலவிய சில காலப்பகுதிகளில் விவசாயத்துறையில் பின்னடைவு ஏற்பட்டது எனலாம். கடந்த பல போகங்களில் (2016-2017) இடையிடையே நிலவிய வறட்சி, வெள்ளம் ஆகிய அனர்த்தங்களுக்கு நாம் முகங்கொடுத்து வருகின்றோம். இதன் விளைவாக, பாரிய அந்நியச் செலாவணியை செலவிட்டு வெளிநாடுகளில் இருந்து அரிசி மற்றும் ஏனைய அத்தியாவசிய உணவு வகைகளை அரசாங்கத்தினால் தருவிக்க வேண்டி நேரிட்டது.

02. இவ்வாறான பின்னணியில் நச்சுத்தன்மையற்ற தேசிய உணவு உற்பத்தியை துரிதகதியில் மேம்படுத்தும் நோக்கில், ‘ விளைச்சல் பெருகிட ஒருமித்து எழுவோம்’ எனும் தொனிப்பொருளை அடிப்படையாக கொண்டு அதிமேதகு சனாதிபதி அவர்களினால் அனைத்து தரப்பினரதும் பங்களிப்பு மற்றும் அவதானத்தைப் பெறக்கூடிய வகையில் தேசிய உணவு உற்பத்திப் புரட்சியை ஆரம்பிக்குமுகமாக 2017 ஒக்ரோபர் 06 ஆந் திகதியில் இருந்து ஒக்ரோபர் 12 வரையான வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

03. இச் சந்தர்ப்பத்தில் விவசாயத் துறை மற்றும் அதனுடன் இணைந்த அனைத்து அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், விவாசாயிகள், தனியார் துறையினர் ஆகியோரின் பங்களிப்புடன் துரித வேலைத்திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளதுடன், அரசாங்க அலுவலர்களான நாம் அனைவரும் எமது பங்களிப்பினையும் இது தொடர்பாக வழங்க வேண்டியது எமது பொறுப்பும் தலையாய கடமையுமாகும்.

04. அரசாங்க அலுவலர்களான நாம் பல்வேறு செயற்பாடுகளின் மூலம் இந் நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவோம் என்பதை எடுத்துக் காட்டுவோம்.

**அரசாங்க அலுவலர்களின் பணிப்பொறுப்புக்கள்**

I. அரசாங்க அலுவலர்கள் வசிக்கும் தமது தனிப்பட்ட வீட்டிற்கருகே உள்ள தோட்டம்/ அரசாங்க உத்தியோகபூர்வ விடுதிகள் அமைந்துள்ள தோட்டங்களில் மரக்கறி வகைகள், பழ வகைகள் போன்ற வீட்டுத் தோட்ட பயிர்கள் மாத்திரமின்றி நீண்டு கால விளைச்சலைக் கொடுக்கும் பயிர்செய்கைகளையும் உருவாக்குதல்.

II. உயர் தரநியமங்களைக் கொண்ட, அதிக விளைச்சலைக் கொடுக்கும் பயிர் வகைகள், விதை வகைகளை உசிதமான நாற்றுமேடைகளில் இருந்து பெற்று தமது அமைச்சின், சேவை நிலையத்தின் அலுவலர்களுக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

III. தாம் பணியாற்றும் அலுவலக வளாகத்தில் மரக்கறி வகைகளை, பழ வகைகளை மற்றும் நீண்ட கால விளைச்சலைத் தரவல்ல தாவரங்களை நடுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

IV. தமது அயலவர்கள் மற்றும் பொது மக்களையும் இப் பணியில் ஈடுபடுமாறு விழிப்பூட்டி அவர்களுக்கு ஊக்கமளித்தல்.

V. பொது மக்களுக்கு இது தொடர்பாக தேவைப்படும் விதைகள், பயிர் வகைகள், பிற உதவிச் சேவைகள் மற்றும் தொழிநுட்ப அறிவு என்வைற்றைப் பெற்றுக் கொடுப்பதற்குத் தேவையான ஒத்துழைப்பினை வழங்குதல்.

VI. பாடசாலை வளாகத்தில் பிள்ளைகளின் பங்களிப்புடன் தோட்ட பயிர்செய்கைகளை உருவாக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல்.

VII. கள அலுவலர்களின் பங்களிப்பினை உச்சளவில் பெற்றுக் கொள்ளல்.

வீட்டுத் தோட்ட பயிர்செய்கையை கண்காணிப்பதற்கும், தேவையான பங்களிப்பினை வழங்குவதை ஒருங்கிணைப்பதற்கும் ( பயிர் வகைகள், விதை வகைகள், தொழிநுட்ப ஆலோசனைகள்), தரவுகளை சேகரிப்பதற்கும், மேம்பாட்டு அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வதற்கும், கிராம அலுவலர், அபிவிருத்தி அலுவலர், சமுர்த்தி அலுவலர், விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி உதவி அலுவலர் ஆகிய கள அலுவலர்களை ஈடுபடுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் கள அலுவலர்களின் ஆளுகை

எல்லைக்குள் கிராமிய வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

VIII. சிறந்த உணவுப் பயன்பாட்டு முறைகள் தொடர்பான விழிப்பூட்டல்.

தகுந்த வளவாளர் ஒருவரை ஈடுபடுத்தி, அரசாங்க நிறுவன மட்டத்தில் மற்றும் பாடசாலை மட்டத்தில் தேசிய உணவு பயன்பாடு, உணவு வீண்விரயத்தை குறைத்தல், நச்சுத்தன்மையற்ற உணவு பயன்பாடு, போசாக்குணவு வேளையொன்றைத் தயாரிப்பது என்பன தொடர்பாக விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

IX. போட்டிகளை நடாத்துதல்

இந் நிகழ்ச்சித் திட்டத்தில் அனைவரும் கலந்து கொள்வதற்கும், அனைவரது பங்களிப்பினையும் அதிகரித்துக் கொள்வதற்கும், போட்டி நிகழ்ச்சித்திட்டங்களை அரசாங்க அலுவலர்களுக்கான வீட்டுத் தோட்ட மட்டத்திலும், அரசாங்க நிறுவன மட்டத்திலும் பாடசாலை மட்டத்திலும் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

X. நிகழ்ச்சித்திட்டத்திற்குப் பொறுப்பான செயற்பாடு மற்றும் கண்காணிப்பு

இது தொடர்பாக அமைச்சு மற்றும் திணைக்கள மட்டத்தில் சிரேஷ்ட அலுவலர் ஒருவரை நியமிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுத்தல்.

05. இவ் அரிய நிகழ்ச்சித்திட்டத்தை சிறப்பாக முன்னெடுத்து, நாட்டின் உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கும், விவசாயத்தில் தன்னிறைவு பெற்ற நாடாக இந் நாட்டை திகழச்செய்வதற்கும் அரசாங்க அலுவலர்களான உங்கள் அனைவரினதும் அர்ப்பணிப்புடனான சேவையையும், பங்களிப்பினையும் வழங்கும்படி தயவுடன் அறியத் தருகின்றேன்.

ஜே.ஜே. ரத்னசிறி
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு

**பிரதிகள்**

1. சனாதிபதியின் செயலாளர், சனாதிபதி செயலகம் - தயவுடன் அறிந்துகொள்ளும் பொருட்டு
2. பிரதமரின் செயலாளர், பிரதமர் அலுவலகம் - தயவுடன் அறிந்துகொள்ளும் பொருட்டு